# பொருளியல்

# ECONOMICS

# G. C. E. A|L

முன் மாதிரி வினு விடைகள்

அருமை

பொருளாதாரப் பண்டம் -
- இலவசப் பண்டம்

அமையச் செலவு

உற்பத்தி சாத்திய வளையி

ஆசிரியர் : உதயன்

வெளியீடு:
நியூஸ்டார் கல்வி நிலையம், மல்லாகம்

அருமை
******

1. பொருளியலில் அருமை என்றால் என்ன?

2. பொருளியல் அறிஞர்கள் ஏன் எல்லா வளங்களையும் அருமை என கூறுவதில்லை?

3. இலங்கையின் நிலப்பரப்பு 65,610 சதுரமைல் ஆக இருப்பதால் தான் இலங்கையில் நிலப் பற்றாக்குறை காணப்படுகின்றது. இக் கூற்றை ஏற்பீரா?

4. இலங்கையில் வேலையின்மை காணப்படுகிறது. எனவே இலங்கையில் பெருமளவு ஊழியம் பயன்படுத்தப்படாமல் இருக்கிறது. ஆகையால் இலங்கையில் ஊழியப் பற்றாக்குறை இல்லை என முடிவாகக் கூறலாம். இது சரியா?

5. இலங்கையுடன் ஒப்பிடும் போது ரசியாவில் மூலதனம் கூடுதலாகக் காணப்படுகிறது. எனவே ரசியாவில் மூலதனப் பற்றாக்குறை என்பதேயில்லை. இதை நீர் ஏற்பீரா?

<u>சரியான விடையின் கீழ் கோடிடுக.</u>

6. அருமை என்ற பிரச்சனை தோன்றக் காரணம்;
   1) வளங்கள் ஓர் பௌதீக வரையறைக்கு உட்பட்டதாக இருத்தல்.
   2) வளங்கள் குறைவாக இருத்தல்.
   3) வளர்முக நாடுகளில் மட்டும் குறைவாக வளம் இருத்தல்.
   4) மனித தேவையுடன் ஒப்பிடும் போது வளங்கள் ஓர் வரையறைக்குட்பட்டதாக இருத்தல்.

7. பொருளியல் அறிஞர்கள் சூரிய ஒளி, காற்று போன்ற வளங்களை அருமையாக இல்லை எனக் கூறுவதற்குக் காரணம்;

1) அவை இயற்கை வளமாக இருத்தல்.
2) அவற்றிற்கு உற்பத்தி செலவு இல்லை.
3) அவற்றை உற்பத்திக்கு பயன்படுத்த முடியாது.
4) அவை மனித தேவையோடு ஒப்பிடும் போது மேலதிகமாக இருத்தல்.

8. இலங்கையில் பெருமளவு நிலம் பயன்படுத்தப்படாமல் இருப்பதற்குக் காரணம்;

1) தேவைக்கு மேலதிகமாக கிடைக்கின்றது.
2) இலங்கையில் பெருமளவு நிலம் உற்பத்திக்குப் பயன்படுத்த முடியாத நிலம்.
3) ஏனைய வளப் பற்றுக்குறை, குறிப்பாக மூலதனப் பற்றுக்குறை.
4) மனித தேவையை அளவீடு செய்ய முடியாமல் இருத்தல்.

9. இலங்கையுடன் ஒப்பிடும் போது பிரித்தானியாவில் மூலதனம் காணப்படுதல் கூடுதலாக உள்ளது. எனவே பிரித்தானியாவில் மூலதனப் பற்றுக்குறை;

1) இல்லை எனக் கூறலாம்.
2) உண்டு எனக் கூறலாம்.
3) ஓரளவே சரியானது எனக் கூறலாம்.
4) மேற்கூறிய யாவையும் பிழையானது.

10. வளப் பற்றாக்குறையை ஒப்பிடும் போது;

1) மனித தேவையுடன் ஒப்பிடுதல் வேண்டும்.

2) ஏனைய வளங்களுடன் ஒப்பிடுதல் வேண்டும்.

3) நாடுகளுடன் ஒப்பிடுதல் வேண்டும்.

4) இயற்கை வளங்களுடன் ஒப்பிடுதல் வேண்டும்.

5) அவற்றின் எண்ணிக்கையுடன் ஒப்பிட வேண்டும்.

குறிப்பு:- அருமை என்ற விடயம் "மனித தேவையுடன்" ஒப்பிடுதல் வேண்டும். ஏனைய வேறு விடயங்களுடன் ஒப்பிட்டால் அது தவறானதாக் அமையும்.

பொருளாதார பண்டமும், இலவசப் பண்டமும்
**********************************

1. பொருளாதார பண்டத்திற்கும், பொருளாதாரமில்லா பண்டத்திற்கும் இடையிலான வேறுபாடுகளை எடுத்து உரைக்க.

2. விவசாயிகளுக்கு அரசாங்கம் உரத்தை மானியமாக அதாவது கட்டணமின்றி வழங்குகிறது. எனவே அது பொருளாதாரமில்லா பண்டமாகும். இதை ஏற்பீரா?

3. பின்வருவன இலவசப் பண்டமா? விளக்குக.

அ) இலவச பாடப் புத்தகம்.

ஆ) இலவச அரிசி.

இ) இலவச மதிய போசன உணவு.

ஈ) இலவச குழாய் நீர்.

உ) இலவச விடுமுறைப் பயணச் சீட்டு.

4. பின்வருவனவற்றை பொருளாதாரப் பண்டம் எனக் கூறி விளக்குக.

அ) பொது மயானம்.

ஆ) புதையல்.

இ) கடற்கரை மணல்.

ஈ) மிருகக்காட்சி சாலையிலுள்ள மனித குரங்கு.

உ) பசு தன் கன்றுக்கு கொடுக்கும் பால்.

5. "இலவசமாக கிடைக்கின்ற எல்லா பண்டமும் இலவச பண்டமல்ல". இக் கூற்றை விளக்குக.

<u>சரியான விடையின் கீழ் கோடு கீறுக.</u>

6. "இலவச பாடநூல்" இலவச பண்டமல்ல.
ஏனெனில்,

1) அதற்கு உற்பத்தி செலவு காணப்படுகிறது.

2) அமையச் செலவு காணப்படுகிறது.

3) அரசாங்கத்தால் உற்பத்தி செய்யப்படுகிறது.

4) இப் புத்தக உற்பத்திக்கு பயன்பட்ட வளம் மாற்று உபயோகம் அற்றது.

இவற்றில் சரியான விடை/விடைகள்;

1) முதலாவதும், மூன்றுவதும்.

2) முதலாவது மட்டும்.

3) முதலாவதும், இரண்டாவதும்.

4) இரண்டாவது மட்டும்.

7. "சூரிய ஒளி" ஓர் பொருளாதார பண்டம் அல்ல. ?

1) ஆக்க செலவு இல்லை.

2) தியாக செலவு இல்லை.

<u>வினா 7 இன் தொடர்ச்சி</u>

3) உற்பத்திக்கு பயன்படாது.
4) அளவிட முடியாது.

மேலே உள்ளவற்றில் சரியான விடை/விடைகள்;
1) 1 உம், 2 உம்.
2) 2 உம், 3 உம்.
3) 1 மட்டும்.
4) 2 உம், 4 உம்.

8. ஓர் இலவசப் பண்டம் பொருளாதார பண்டமாக மாறும். எப்போதெனில்;
1) உற்பத்திச் செலவு ஏற்பட்டால்.
2) அமையச் செலவு ஏற்பட்டால்.
3) மனித தேவையுடன் ஒப்பிடும் போது பற்றாக் குறையாக இருந்தால்.
4) கூடுதலான கேள்வி ஏற்பட்டால்.

மேலே உள்ளதில் சரியான விடை/விடைகள்;
1) 1 உம், 2 உம்.
2) 1 உம், 2 உம், 4 உம்.
3) 1 உம், 2 உம், 3 உம்.
4) ஒன்று மட்டும்.

9. "மனிதனுக்கு இன்றியமையாத எல்லாப் பண்டமும் பொருளாதார பண்டமே". இக் கூற்று;
1) சரியானது. 2) தவறானது.
3) ஓரளவு சரியானது.
4) மேற்கூறப்பட்ட யாவும் தவறானது.

10. பொருளியல் பண்டத்தின் சிறப்பியல்புகள் சில;

1) தேவையுடன் ஒப்பிடும் போது மேலதிகமாகவுண்டு

2) உற்பத்தி செலவும், விலையும் உண்டு.

3) அமையச் செலவு உண்டு.

4) தனியுரிமை கொண்டாடப்படும்.

5) தேவையோடு ஒப்பிடும் போது குறைவாக இருக்கும்.

சரியான விடை;

1) ஒன்று மட்டும்.

2) ஒன்றும், இரண்டும், மூன்றும்.

3) இரண்டு, மூன்று, நான்கு, ஐந்து.

4) இரண்டு, நான்கு, ஐந்து.

அமையச் செலவு
************

அமையச் செலவு என்பதில் இருந்து நீர் விளங்குவது என்ன? இரு உ-ம் தந்து விளக்குக.

"அமையச் செலவு தோன்றக் காரணம் அமையச் செலவு". இக் கூற்றை விளக்குக.

. அமையச் செலவு என்பதனை பின்வருவனவற்றுடன் தொடர்புபடுத்தி விளக்குக.

அ) நுகர்வு ஆ) உற்பத்தி

இ) சொந்த நிதியை பயன்படுத்தல்.

4. சொந்த நிதியை பயன்படுத்துவதற்கான வாய்ப்பு செலவு என்ன?

5. அமையச் செலவை உற்பத்தி சாத்திய வளையியுடன் உதவி கொண்டு விளக்குக.

சரியான விடையின் கீழ் கோடிடுக.

6. அமையச் செலவு என்பதன் கருத்து;
 1) ஒரு பொருளை உற்பத்தி செய்ய ஏற்படும் பணச் செலவு.
 2) ஒரு பொருளை கொள்வனவு செய்ய ஏற்படும் செலவு
 3) ஒரு பொருளை உற்பத்தி செய்வதற்கு இன்னொரு பொருளை இழக்கின்ற செலவு.
 4) ஒரு பொருளை விற்பனை செய்வதற்கு ஏற்படும் செலவு.

7. அமையச் செலவு தோன்றக் காரணம்;
 1) வளங்கள் மாற்றுபயோகம் உடையதாக இருப்பது.
 2) வளங்கள் ஒன்றுக்கு மேற்பட்டவையாக இருத்தல்.
 3) வளம் அருமையாக இருத்தல்.
 4) வளம் ஓர் எண்ணிக்கைக்குட்பட்டதாக இருத்தல்.

8. அமையச் செலவு தோன்றாமல் இருக்கும் நிலை;
 1) வளம் ஒரு தேவைக்கு மட்டும் பயன்படுத்தப்படல்.
 2) வளம் மாற்று உபயோகமாக இருத்தல்.
 3) வளம் எண்ணிக்கையில் கூடுதலாக இருத்தல்.
 4) வளம் எல்லா நாடுகளிலும் கூடுதலாக இருத்தல்.

9. சொந்த நிதியை பயன்படுத்தும் ஓர் நிறுவனத்தின் வாய்ப்பு செலவு;
 1) வட்டியும், லாபம், பங்கிலாபம்.
 2) நிறுவனத்தின் லாபம்.
 3) நிறுவனத்தின் பணச் செலவு.
 4) மேலே குறிப்பிட்ட ஒன்றும் இல்லை.

0. அமையச் செலவு என்பதற்கு மறுபெயர்களைக் குறிக்கும் ஒழுங்கான தொடர்;

   1) தியாகச் செலவு, வாய்ப்பு செலவு, சந்தர்ப்ப செலவு.
   2) சந்தர்ப்ப கிரயம், உற்பத்தி செலவு, பணச் செலவு.
   3) சந்தர்ப்பச் செலவு, மூலதன வாய்ப்புச் செலவு, பணச் செலவு.
   4) தியாக செலவு, ஆக்கச் செலவு, வாய்ப்புச் செலவு.

ன்வரும் ஒவ்வொரு பந்தியிலும் உள்ள வளங்களின் மாற்று பயோகம், அமையச் செலவு என்பதனை தெளிவாக விளக்குக.

1. பிரித்தானியா அரசாங்கம் இலங்கைக்கு மகாவலி அபிவிருத்தித் திட்டத்துக்கு என 1500£ (ஸ்ரேலிங் பவுண்) நன்கொடையாக வழங்குகிறது. அத் திட்டத்தை அபிவிருத்தி செய்ய மேலும் 1000 M.R. (மி.ரூபா) தேவை. இத் தொகை அரசாங்கம் மக்களிடம் இருந்து வரியாகவே அறவிட வேண்டும். இலங்கை, பிரித்தானியாவின் நன் கொடையை ஏற்பதா என்னும் பிரச்சனைக்கு ஆளாகிறது.

2. உமது நண்பர் இம்முறை பரீட்சையில் சிறந்த பேறுகளை பெற்று பல்கலைக்கழகம் ஒன்றுக்கு அனுமதி கிடைத்துள்ளது. அதே வேளையில் அவருக்கு மாதம் 2000/- சம்பளத்துடன் ஒரு வேலை ஒன்றும் உண்டு. அவர் பல்கலைக் கழகம் போவதா? இல்லையா?

13. சாந்தன் என்பவரிடம் 200000ரூபா சொந்த நிதியாக உள்ளது. அவர் அதனை ஊ ப்ரு பிறன்ஸ் லிமிட்டட்டில் இட்டால் வருடாந்தம் 25% வட்டி வருமானத்தைப் பெற முடியும். அவர் அந்நிதியை கொண்டு ஓர் சில்லறை வியாபாரத்தை ஆரம்பிக்க விரும்புகிறார்.

14. கந்தன் என்ற விவசாயிடம் 5 பரப்பு நிலம் உள்ளது. அவர் அதில் வெங்காயத்தைப் பயிரிடலாம். அல்லது மிளகாயை பயிரிடலாம். அவர் எதைப் பயிரிடுவது என்ற பிரச்சனைக்கு ஆளாகிறார்.

15. X என்பவரிடம் 300000 ரூபா சொந்த நிதி உள்ளது. அவர் அந்த நிதியை ஓர் வங்கியில் இட்டால் வருடம் 20% வட்டியைப் பெறமுடியும். அவர் அந் நிதியை பயன்படுத்தி தனது சொந்தத் தேவைக்கும், வாடகைக்கு விடுவதற்கும் என ஓர் இரண்டு சக்கர உழவு இயந்திரத்தைக் கொள்வனவு செய்ய எண்ணுகிறார்.

உற்பத்தி சாத்திய வளையி.
*******************

1. உற்பத்தி சாத்திய வளையி என்றால் என்ன?
2. உற்பத்தி சாத்திய வளையியைக் கொண்டு அமையச் செலவை விளக்குக.
3. ஆக்கச் சாத்திய வளையியை பயன்படுத்திப் பொருளாதார வளர்ச்சியை விளக்குக.

4. ஆக்க இயல்தகு வளையியை பயன்படுத்தி வேலையின்-மையை விளக்குக.

5. ஆக்க சாத்திய வளையியை பயன்படுத்தி வளங்களின் மாற்று உபயோகத்தை விளக்குக.

6. ஆக்க சாத்திய வளையியைப் பயன்படுத்தி அமையச் செலவை விளக்குக.

7. ஆக்கச் சாத்திய உதவியுடன் நிறை தொழில் மட்டத்தை விளக்குக.

8. உற்பத்தி சாத்திய வளையியைப் பயன்படுத்தி வளங்களின் அருமையை விளக்குக.

9. உற்பத்தி சாத்திய வளையியைப் பயன்படுத்தி சமன-ற்ற பொருளாதார வளர்ச்சியை விளக்குக.

10. உற்பத்தி சாத்திய வளையியைப் பயன்படுத்தி நாடுகளின் வளர்ச்சியை ஒப்பிடுக.

11. உற்பத்தி சாத்திய வளையியைப் பயன்படுத்தி சிறப்புத் தேர்ச்சியை விளக்குக.

12. கிடையச்சில் உற்பத்திக்கு பயன்படுத்திய தொழில்-நுட்ப முன்னேற்றத்தை உற்பத்தி சாத்திய வளையியை பயன்படுத்தி விளக்குக.

13. நிலைக்குத்தச்சு உற்பத்தியில் பயன்படுத்திய தொழில்நுட்ப முன்னேற்றத்தை உற்பத்தி சாத்திய வளையியைக் கொண்டு விளக்குக.

14. சமனற்ற தொழில் நுட்ப முன்னேற்றத்தை உற்பத்தி சாத்திய வளையியைக் கொண்டு விளக்குக.

15. நிலைக்குத்தச்சிலும் கிடையச்சிலும் பயன்படுத்தி நுட்பம் இரண்டிலும் ஒரே சீரான முன்னேற்றம் பட்டதை உற்பத்தி வளையியைக் கொண்டு விள

16. நிலைக்குத்து அச்சிலும் கிடை அச்சிலும் பயன்ப தொழில்நுட்பம் வீழ்ச்சியடைவதை உற்பத்தி ச வளையியைக் கொண்டு விளக்குக.

17. நேர்கோட்டு உற்பத்தி சாத்திய வளையியை

18. உற்பத்திக்கு குழிவான உற்பத்தி சாத்திய வளை விளக்குக.

19. உற்பத்திக்கு குவிவான உற்பத்தி சாத்திய வளை விளக்குக.

20. நிலைக்குத்து அச்சில் பயன்படுத்திய தொழில்நுட வீழ்ச்சியிலும் பார்க்க கிடை அச்சில் பயன்படு தொழில்நுட்ப வீழ்ச்சி பெருமளவாக இருப்பதை உற்பத்தி சாத்திய வளையியைக் கொண்டு விளக்

21. நிலைக்குத்தச்சில் பயன்படுத்திய தொழில்நுட்பம் மட்டும் வீழ்ச்சியடைவதை உற்பத்தி சாத்திய கொண்டு விளக்குக.

22. கிடை அச்சில் பயன்படுத்திய தொழில் நுட்பம் வீழ்ச்சியடைவதை உற்பத்தி சாத்திய வளையியை கொண்டு விளக்குக.

23. எப்போது ஓர் உற்பத்தி சாத்திய வளையி வளை முடியாது?

24. உற்பத்தி சாத்திய வளையியின் எடுகோள்கள் எ

25. உற்பத்தி சாத்திய வளையியைப் பயன்படுத்தி ஓர் நாடு அபிவிருத்தி அடைந்த நாடு என்பதை விளக்குக.

சரியான விடையின் கீழ் கோடிடுக.

26. ஒரு பொருளாதாரம் A , B ஆகிய இரண்டு பொருட்களையும் முறையே கிடையச்சிலும், நிலைக்குத்தச்சிலும் உற்பத்தி செய்கிறது. A யின் தொழில்நுட்ப முன்னே-ற்றம் அடைந்தால்....,

1) B யின் உற்பத்தி மாறுத போது A யின் உற்ப-த்தி அதிகரிக்கும்.
2) A யின் உற்பத்தி மாறுத போது B யின் உற்ப-த்தி அதிகரிக்கும்.
3) A யினதும், B யினதும் உற்பத்திகள் அதிகரிக்கும்.
4) A யினதும், B யினதும் உற்பத்தி குறையும்.
5) B யின் உற்பத்தி மட்டும் அதிகரிக்கும்.

27. ஒரு பொருளாதாரம் முறையே X, Y ஆகிய இரு பண்டங்களை முறையே கிடையச்சிலும், நிலைக்குத்து அச்சிலும் உற்பத்தி செய்கிறது. Y யின் தொழில்நுட்பம் முன்னேற்றம் அடைகிறது. எனவே உற்பத்தி சாத்திய வளையி;

1) X இன் உற்பத்தியும் Y இன் உற்பத்தியும் அதிக-ரிக்கும்.
2) X இன் உற்பத்தி மாறுத போது Y இன் உற்பத்தி அதிகரிக்கும்.
3) Y இன் உற்பத்தி மாறுத போது X இன் உற்பத்தி குறையும்.
4) X இனதும் Y இனதும் உற்பத்தி குறையும்.

28. ஒரு பொருளாதாரம் M, N ஆகிய இரு பொருட்களை முறையே கிடை அச்சிலும், நிலைக் குத்தச்சிலும் உற்பத்தி செய்கிறது. M இன் தொழில்நுட்பம் வீழ்ச்சியடைகிறது. எனவே உற்பத்தி சாத்திய வளையி;

1) M இன் உற்பத்தி மாறாத போது N இன் உற்பத்தி குறையும்.
2) M இன் உற்பத்தி மாறாத போது N இன் உற்பத்தி அதிகரிக்கும்.
3) N இன் உற்பத்தி மாறாத போது M இன் உற்பத்தி குறையும்.
4) N இன் உற்பத்தி மாறாத போது M இன் உற்பத்தி அதிகரிக்கும்.

29. ஒரு பொருளாதாரம் P, Q ஆகிய இரு பொருட்களை கிடை அச்சிலும், நிலைக்குத்தச்சிலும் உற்பத்தி செய்கிறது. Q உற்பத்தியில் பயன்படுத்திய தொழில்நுட்பம் வீழ்ச்சி அடைகிறது எனின்,

1) P யின் உற்பத்தி மட்டும் குறையும்.
2) Q வின் உற்பத்தி மட்டும் அதிகரிக்கும்.
3) Q.வின் உற்பத்தி மட்டும் குறையும்.
4) P யினதும் வினதும் உற்பத்தி குறையும்.

30. ஒரு பொருளாதாரம் C, D ஆகிய இரு பொருட்களை முறையே கிடையச்சிலும், நிலைக் குத்தச்சிலும் உற்பத்தி செய்கிறது. இரண்டினதும் தொழில்நுட்பம் முன்னேற்றம் அடைகிறது எனில்;

1) இரண்டினதும் உற்பத்தி அதிகரிக்கும்.
2) இரண்டினதும் உற்பத்தி குறையும்.

30 இன் தொடர்ச்சி...

3) C யின் உற்பத்தி மட்டும் குறையும்.

4) D யின் உற்பத்தி மட்டும் குறையும்.

31. ஒரு பொருளாதாரம் B , C ஆகிய இரு பொருட்களை உற்பத்தி செய்கிறது. B யின் தொழில்நுட்ப முன்னேற்றத்திலும் பார்க்க C யின் தொழில்நுட்ப முன்னேற்றம் கூடுதலாக உள்ளது எனின்;

1) இரண்டினதும் உற்பத்தி ஒரே அளவால் அதிகரிக்கும்.
2) இரண்டினதும் உற்பத்தி ஒரே அளவால் குறையும்.
3) B யின் உற்பத்தி அதிகரிப்பிலும் பார்க்க C யின் உற்பத்தி அதிகரிப்பு கூடுதலாக இருக்கும்.
4) C யின் உற்பத்தி அதிகரிப்பிலும் பார்க்க B யின் உற்பத்தி அதிகரிப்பு கூடுதலாக இருக்கும்.

32. ஒரு பொருளாதாரம் E , F என்ற இரு பொருட்களை உற்பத்தி செய்கிறது. E யின் தொழில்நுட்ப வீழ்ச்சியிலும் பார்க்க F யின் தொழில்நுட்ப வீழ்ச்சி கூடுதலாக உள்ளதெனின்;

1) இரண்டினதும் உற்பத்தியும் ஒரேயளவால் குறையும்.
2) E யின் உற்பத்தி குறைவிலும் பார்க்க F இன் உற்பத்தி குறைவு கூடுதலாக இருக்கும்.

32 இன் தொடர்ச்சி...

3) F இன் உற்பத்தி குறைவிலும் பார்க்க E யின் உற்பத்தி குறைவு கூடுதலாக இருக்கும்.
4) மேற்கூறியவை யாவும் தவறு.

33. உற்பத்திக்கு குழிவாக உற்பத்தி சாத்திய வளையி இருந்தால்;
1) மாறாத அமையச் செலவைக் குறிக்கும்.
2) குறைந்து செல்லும் அமையச் செலவைக் குறிக்கும்.
3) கூடிச் செல்லும் அமையச் செலவைக் குறிக்கும்.
4) அமையச் செலவே தோன்றாது.

34. உற்பத்திக்கு குவிவாக உற்பத்தி சாத்திய வளையி இருந்தால்;
1) மாறாத அமையச் செலவைக் குறிக்கும்.
2) குறைந்து செல்லும் அமையச் செலவை குறிக்கும்.
3) கூடிச் செல்லும் அமையச் செலவைக் குறைக்கும்.
4) அமையச் செலவே தோன்றாது.

35. நேர்கோட்டு உற்பத்தி சாத்திய வளையியாயின்;
1) அமையச் செலவு மாறாது.
2) அமையச் செலவு கூடும்.
3) அமையச் செலவு குறையும்.
4) அமையச் செலவு தோன்றாது.

36. வேலையின்மையைக் காட்டுவதாயின் ஓர் உற்பத்தி சாத்திய வளையியில்;
1) உட்புறமாக ஓர் புள்ளியைக் குறிக்க வேண்டும்.
2) வெளிப்புறமாக ஓர் புள்ளியைக் குறிக்க வேண்டும்.
3) உற்பத்திக்கு ஆரம்பமான புள்ளியை குறிக்க வேண்டும்.

36 இன் தொடர்ச்சி...

4) உற்பத்தி சாத்திய வளையியில் குறித்தல் வேண்டும்.

37. பொருளாதார வளர்ச்சியைக் காட்டுவதாயின்;

1) உற்பத்திக்கு சாத்தியமான ஓர் பருதியில் புள்ளியிடப்படல்.
2) வெளிப்புறமாக ஓர் புள்ளியைக் குறித்தல்.
3) உற்பத்தி சாத்திய வளையியில் புள்ளியைக் குறித்தல்.
4) இரு புள்ளிகளை ஏதேனும் ஓர் இடத்தில் குறித்தல்.

38. நிறை தொழில் மட்டத்தைக் காட்டுவதாயின்;

1) வெளிப்புறத்தில் ஓர் புள்ளியை இடுதல்.
2) உட்புறத்தில் ஓர் புள்ளியை இடுதல்.
3) உற்பத்தி சாத்திய வளையியில் ஓர் புள்ளியை இடுதல்.
4) உட்புறத்திலும், வெளிப்புறத்திலும் புள்ளியை இடுதல்.

39. அமையச் செலவை வரிப்படத்தில் காட்டுவதாயின்;

1) உட்புறத்தில் இரு புள்ளிகளை இடுதல்.
2) வெளிப்புறத்தில் இரு புள்ளிகளை இடுதல்.
3) உற்பத்தி சாத்திய வளையியில் இரு புள்ளிகளை இடுதல்.
4) உட்புறத்திலும், வெளிப்புறத்திலும் இரு புள்ளிகளை இடுதல்.

40. அதிகரித்துக் கொண்டு செல்லும் அமையச் செலவை கொண்ட உற்பத்தி சாத்திய வளையியை வரைவதாயின்;

1) நேர்கோடாக வரைய வேண்டும்.
2) உற்பத்தி புள்ளிக்கு குழிவாக வரைய வேண்டும்.
3) உற்பத்தி புள்ளிக்கு குவிவாக வரைய வேண்டும்.
4) உற்பத்தி சாத்திய வளையி வலப்பக்கம் நகர வேண்டும்.

41. குறைந்து செல்லும் அமையச் செலவைக் கொண்ட உற்பத்தி சாத்திய வளையியை வரைவதாயின்;

1) நேர்கோடாக வரைய வேண்டும்.
2) உற்பத்திக்கு குவிவாக வரைய வேண்டும்.
3) உற்பத்திக்கு குழிவாக வரைய வேண்டும்.
4) உற்பத்தி சாத்திய வளையி இடப்பக்கம் நகர வேண்டும்.

42. ஒரே சீரான அமையச் செலவாக இருக்க வேண்டுமாயின்;

1) நேர்கோடாக உற்பத்தி சாத்திய வளையியை வரைய வேண்டும்.
2) உற்பத்திப் புள்ளிக்கு குழிவாக உற்பத்தி சாத்திய வளையியை வரைய வேண்டும்.
3) உற்பத்திப் புள்ளிக்கு குவிவாக உற்பத்தி சாத்திய வளையியை வரைய வேண்டும்.
4) வலப்பக்கம் உற்பத்தி சாத்திய வளையி நகரும்.

43. ஓர் உற்பத்தி சாத்திய வளையியின் கருத்து;

1) ஓர் பொருளாதாரம் தனது வளத்தை முழுமையாகவும், திறமையாகவும் பயன்-படுத்தி உற்பத்தி செய்யக்கூடிய இரண்டு பொருட்களின் பல்வேறுபட்ட சேர்க்கையை காட்டுகின்ற ஓர் கோடு.
2) இரு பொருட்களை மட்டும் உற்பத்தி செய்ய முடியும்.
3) அமையச் செலவை காட்டுகின்ற ஓர் வளையி.
4) தொழில் நுட்பத்தைக் காட்டுகின்ற வளையி.


44. ஓர் உற்பத்தி சாத்திய வளையியில் உட்புறத்தில் ஓர் புள்ளி குறிப்பது;

1) வேலையின்மையை.
2) பொருளாதார வளர்ச்சியை.
3) நிறை தொழில் மட்டத்தை.
4) அமையச் செலவை.

45. ஓர் உற்பத்தி சாத்திய வளையியின் வெளிப்புறப் புள்ளி குறிப்பது;

1) வேலையின்மையை.
2) பொருளாதார வளர்ச்சியை.
3) நிறை தொழில் மட்டத்தை.
4) அமையச் செலவை.

<u>வரிப் படத்தின் உதவியுடன் சரியான விடையின் கீழ் கோடிடுக.</u>




46. D என்ற புள்ளி குறிப்பது,
   1) வேலையின்மை.
   2) பொருளாதார வளர்ச்சி.
   3) அமையச் செலவை.
   4) வளங்களின் மாற்று உபயோகம்.

47. E புள்ளி குறிப்பது;
   1) வேலையின்மை.
   2) அமையச் செலவு.
   3) பொருளாதார வளர்ச்சி.
   4) நிறை தொழில் மட்டம்.

48. C என்ற புள்ளி குறிப்பது;
   1) வேலையின்மை.
   2) நிறை தொழில் மட்டம்.
   3) பொருளாதார வளர்ச்சி
   4) அமையச் செலவு.

49. F இல் இருந்து C க்கு புள்ளி நகர்வதைக் குறிப்பது;
   1) வேலையின்மையை.
   2) பொருளாதார வளர்ச்சியை.

49 இன் தொடர்ச்சி...

3) அமையச் செலவை.

4) நிறை தொழில் மட்டத்தை.

50. C யில் இருந்து F க்கு புள்ளி நகர்வதைக் குறிப்பது;


1) வேலையின்மை.

2) பொருளாதார வளர்ச்சி.

3) கோதுமையின் வள ஒதுக்கீட்டு அதிகரிப்பு.

4) நிறை தொழில் மட்டம்.

51. A , C என்ற உற்பத்தி சாத்திய வளையி குறிப்பது;





1) அரிசி உற்பத்தியின் தொழில் நுட்ப வீழ்ச்சி.

2) புடவை உற்பத்தியின் தொழில் நுட்ப வீழ்ச்சி.

3) புடவை உற்பத்தியின் அமையச் செலவு.

4) புடவைக்கான கேள்வி குறைவடைந்தமை.

52. A , C என்ற உற்பத்தி சாத்திய வளையி குறிப்பது;





1) அரிசியின் தொழில் நுட்ப முன்னேற்றம்.

2) அரிசியின் தொழில் நுட்ப வீழ்ச்சி.

52 இன் தொடர்ச்சி...


3) புடவையின் தொழில்நுட்ப முன்னேற்றம்.
4) புடவையின் தொழில்நுட்ப வீழ்ச்சி.

53. A.C என்ற உற்பத்தி சாத்திய வளையி குறிப்பது;





1) புடவை தொழில் நுட்ப முன்னேற்றம்.
2) புடவை தொழில் நுட்ப வீழ்ச்சி.
3) புடவை உற்பத்திக்கு கேள்வி அதிகரித்தது.
4) புடவையின் அமையச் செலவு.

54. C, D என்ற உற்பத்தி சாத்திய வளையி குறிப்பது;





1) புடவையினதும் அரிசியினதும் தொழில்நுட்ப முன்னேற்றம்.
2) புடவையின் தொழில் நுட்ப முன்னேற்றம்.
3) அரிசியின் தொழில் நுட்ப முன்னேற்றம்.
4) புடவையினதும், அரிசியினதும் தொழில் நுட்ப வீழ்ச்சி.

55. C , D என்ற உற்பத்தி சாத்திய வளையி குறிப்பது;




1) இரு உற்பத்தியினதும் தொழில்நுட்ப வீழ்ச்சி.
2) அரிசியினது தொழில் நுட்ப வீழ்ச்சி.
3) புடவையினது தொழி-ல்நுட்ப வீழ்ச்சி.
4) இரண்டுக்கும் கேள்வி குறைவடைந்தமை.




ஆரம்ப உற்பத்தி சாத்திய வளையி A , B எனக் கருதுக.

56. A , C குறிப்பது;

1) ஆடம்பர பொருளின் தொழில்நுட்ப முன்னேற்றம்.
2) ஆடம்பர பொருளின் தொழில்நுட்ப வீழ்ச்சி.
3) ஆடம்பர பொருளின் அமையச் செலவு.
4) ஆடம்பர பொருளின் வள ஒதுக்கீட்டு அதிக-ரிப்பை.

57. A ,D குறிப்பது;

1) ஆடம்பர பொருளின் தொழில்நுட்ப முன்னேற்றம்
2) ஆடம்பர பொருளின் தொழில்நுட்ப வீழ்ச்சி:
3) அத்தியாவசிய பொருளின் அமையச் செலவு.
4) அத்தியாவசிய பொருளின் தொழில்நுட்ப வீழ்ச்சி

58. B , E குறிப்பது;

1) அத்தியாவசிய பொருளின் தொழில்நுட்ப முன்னேற்றம்.
2) அத்தியாவசிய பொருளின் தொழில்நுட்ப வீழ்ச்சி.
3) ஆடம்பர பொருளின் அமையச் செலவு.
4) அத்தியாவசிய பொருளின் அமையச் செலவு.


59. F _G குறிப்பது;

1) இரண்டினதும் தொழில்நுட்ப முன்னேற்றம்.
2) இரண்டினதும் தொழில்நுட்ப வீழ்ச்சி.
3) இரண்டினதும் அமையச் செலவு,
4) இரண்டினதும் வள ஒதுக்கீட்டு அதிகரிப்பு.

60. தற்பொழுது F ,G யில் இருந்து A , B க்கு நகர்வது;

1) இரண்டினதும் தொழில்நுட்ப வீழ்ச்சி.
2) இரண்டினதும் தொழில்நுட்ப அதிகரிப்பு.
3) இரண்டினதும் அமையச் செலவு.
4) இரண்டினதும் வள ஒதுக்கீட்டு அதிகரிப்பு,

61. அருகில் உள்ள படம் குறிப்பது;




அ) உற்பத்திக்கு குழி வான வடிவம்.


ஆ) உற்பத்திக்கு குவி வான வடிவம்.

இ) அதிகரிக்கும் அமையச் செலவு.

ஈ) குறையும் அமையச் செலவு.

1) 'அ' மட்டும் சரி.
2) 'ஆ' மட்டும் சரி.
3) 'ஆ' உம் 'ஈ' உம் சரி.
4) 'இ' மட்டும் சரி.

62. அருகில் உள்ள படம் குறிப்பது;




அ) உற்பத்திக்கு குழி வான வடிவம்.

ஆ) உற்பத்திக்கு குவி வான வடிவம்.


இ) கூடிச் செல்லும் அமையச் செலவு.

ஈ) குறைந்து செல்லும் அமையச் செலவு.

இவற்றில் சரியானது;

1) 'அ' மட்டும் 2) 'அ', 'இ'
3) 'ஆ' மட்டும் 4) 'ஈ' மட்டும்

63. அருகில் உள்ள படத்தில் M இல் இருந்து N க்குப் புள்ளி நகர்வது;





அ) கொப்பியின் அமையச் செலவு.
ஆ) கொப்பியின் வள ஒதுக்கீடு.
இ) கொப்பியின் நிறை தொழில் மட்டம்.
ஈ) பேனையின் தொழில்நுட்ப வீழ்ச்சி.

சரியானது;

1) 'அ' , 'ஆ'   2) 'அ' மட்டும்
3) 'ஆ' மட்டும்   4) 'இ' மட்டும்

64. P யிலிருந்து Q வுக்கு புள்ளி நகர்வது;




அ) புத்தகத்தின் வள ஒதுக்கீட்டு அதிகரிப்பு.
ஆ) மேசையின் வள ஒதுக்கீட்டு அதிகரிப்பு.
இ) மேசையின் உற்பத்தி வீழ்ச்சி.


சரியானது;

1) 'அ' மட்டும்   2) 'ஆ' மட்டும்
3) 'அ' உம் 'ஆ' உம்.
4) 'அ' உம் 'இ' உம்.

65. E என்ற புள்ளி குறிப்பது;

1) வேலையின்மையை. 2) நிறைதொழில் மட்டம்
3) பொருளாதார வளர்ச்சி.
4) அமையச் செலவு.

66. ஆரம்ப உற்பத்தி சாத்-திய வளையி A , B எனக் கருதுக. A , C என்ற உற்பத்தி சாத்திய வளையி குறிப்பது;





1) புத்தகத்தின் தொழில் நுட்ப முன்னேற்றத்திலும் பார்க்க பேனையின் தொழில்நுட்பம் குறைவாக இருத்தல்.
2) பேனையின் தொழில் நுட்ப முன்னேற்றத்திலும் பார்க்க புத்தகத்தின் தொழில் நுட்ப முன்னேற்றம் கூடுதலாக இருத்தல்.
3) சீரற்ற பொருளாதார வளர்ச்சி.
4) பேனைக்கான மக்களின் கேள்வி குறைவாக இருக்க, புத்தகத்துக்கான மக்களின் கேள்வி கூடுதலாக இருத்தல்.

சரியான விடை;

1) '1' மட்டும் 3) '1', '2'
2) '1', '2', '3' 4) '1', '3'

67. ஆரம்ப உற்பத்தி சாத்திய வளையி A,B எனக் கருதுக. C , D என்ற உற்பத்தி சாத்திய வளையி குறிப்பது;




அ) அரிசியினதும் புடவை-யினதும் தொழில்நுட்ப முன்னேற்றம் ஒரே சீராக இருத்தல்.

67 இன் தொடர்ச்சி...

ஆ) ஒரே சீரான பொருளாதார வளர்ச்சி.

இ) மக்கள் இரு பொருளுக்கான கேள்வியும் ஒரே அளவால் அதிகரித்தல்.


ஈ) மேற்கூறிய யாவும் பிழை.

இவற்றில் சரியான விடை;

1) 'அ' மட்டும் 2) 'அ', 'ஆ'

3) 'அ', 'ஈ' 4) 'ஆ' மட்டும்

68. இரு நாடுகளுக்கான பொருளாதார உற்பத்தி சாத்திய வளையிகள் பின்வருமாறு:




மேற்கூறப்பட்ட வரைபடத்தில் இருந்து;

அ) A என்ற நாடு ஓர் விவசாய நாடு, B என்ற நாடு கைத்தொழில் நாடு.

ஆ) A அபிவிருத்தியடைந்து வரும் நாடு, B அபிவிருத்தியடைந்த நாடு.

இ) B என்ற நாடு விவசாய நாடு, A கைத்தொழில் நாடு.


68 இன் தொடர்ச்சி...

ஈ) B என்ற நாடு அபிவிருத்தி அடைந்து வரும் நாடு, A அபிவிருத்தி அடைந்த நாடு.

சரியான விடை;

1) 'அ' , 'ஆ'   2) 'அ' , 'இ'
3) 'இ' , 'ஈ'   4) 'அ' மட்டும்

69.



தேயிலை

மேலே உள்ள வரிப்படம்

அ) தேயிலையின் வள ஒதுக்கீட்டு அதிகரிப்பைக் காட்டுகின்றது.

ஆ) தேயிலை உற்பத்திக்கான அமையச் செலவு $C - C_1$ என்பதாகும்.


இ) கோப்பியின் வளம் தேயிலைக்கு பயன்படுத்தப்படுகிறது.

ஈ) மேற்கூறிய யாவும் சரி.

சரியான விடை;

1) 'அ' மட்டும்   2) 'ஆ' மட்டும்
3) 'அ', 'ஆ'   4) எல்லாம் சரி.

70. C என்ற புள்ளி குறித்து நிற்பது;




அ) வேலையின்மை.

ஆ) வளம் முழுமையாக பயன்படுத்தவில்லை.

இ) திறமையாக பயன்படுத்தப்படவில்லை.

ஈ) அமையச் செலவு.


சரியான விடை;

1) 'அ' மட்டும் 2) 'அ','ஆ','இ'


3) 'அ','ஆ' 4) 'ஈ' மட்டும்

71. ஒரு பொருளாதாரம் கிடையச்சில் 1000 அலகு தேயிலையையும், நிலைக்குத்தச்சில் 500 அலகு கோப்பியையும் உற்பத்தி செய்கின்றது. எனின் இதன் வரைபடம் எவ்வாறு அமையும்?


1)





2)





3)






4)




72. ஒரு பொருளாதாரம் கிடையச்சில் 1000 அலகு தேயிலையையும், நிலைக்குத்தச்சில் 800 அலகு கோப்பியையும் ஒரே நேரத்தில் உற்பத்தி செய்கின்றது எனின், அதன் ஆரம்ப புள்ளிகள்;


1) 



2) 



3) 



4) 


73. அதிகரிக்கும் அமையச் செலவைக் காட்டும் உற்பத்தி சாத்திய வளையி;


1) 


2) 


3) 


4) 



74. குறைந்து கொண்டு செல்லும் அமையச் செலவைக் காட்டுவது;

1) 



2) 

74 இன் தொடர்ச்சி...

3)




4)




75. மாறுத அமையச் செலவைக் காட்டும் உற்பத்தி சாத்திய வளையி;


1)





2)



3)



4)




76. கிடையச்சில் 2000 அலகு கோப்பியையும் நிலைக்குத்தச்சில் 1000 அலகு பேனையையும் உற்பத்தி செய்தால் கோப்பியில் ஒரு அலகு அதிகரிப்பதற்கான அமையச் செலவு;

1) 0.5 2) 1.5

3) 1 4) 5.1 5) 5.0

77. கிடையச்சில் 2000 அலகு புடவையையும் நிலைக்குத்தச்சில் 2000 அலகு தேயிலையையும் உற்பத்தி செய்தால் ஒரு அலகு புடவை அதிகரிப்பதற்கான

77 இன் தொடர்ச்சி...

அமையச் செலவு;

1) 0.5 2) 2

3) 1 4) 1.5

78. கிடையச்சில் 2000 அலகு தேயிலையையும் நிலைக் குத்தச்சில் 1000 புடவையையும் ஒரே நேரத்தில் உற்பத்தி செய்யப்படுகின்றது. தேயிலையில் ஒரு அலகு அதிகரிப்பதற்கான அமையச் செலவு 0.5 ஆகும். தேயிலையின் ஒரு அங்குலம் 1000 என கருதப்படுகிறது. எனவே புடவையின் இழப்புத் தொகை;

1) 500 2) 1000

3) 1500 4) 2000

79. கிடையச்சில் 4000 அலகு புடவையும் நிலைக்-குத்தச்சில் 4000 அலகு கோதுமையும் ஒரே நேரத்தில் உற்பத்தி செய்யப்படுகிறது. புடவையின் அமையச் செலவு 1 ஆகும். ஒரு அங்குலம் 1000 என புடவை கருதப்படுகிறது. எனவே கோதுமையின் இழப்புத் தொகை;

1) 1000 அலகு 2) 2000 அலகு

3) 4000 அலகு 4) 3000 அலகு

80. கிடையச்சில் 10000 அலகு பேனையையும் நிலைக்குத்தச்சில் 5000 அலகு கொப்பியையும் ஒரே நேரத்தில் உற்பத்தி செய்யப்படுகின்றது. பேனைக்கான அமையச் செலவு 1.5 ஆகும்.

80 இன் தொடர்ச்சி...

பேனையின் ஒரு அலகு 2000 அலகுகள் எனின், கொப்பியின் இழப்புத் தொகை;

1) 2000 அலகு 2) 3000 அலகு

3) 4000 அலகு 4) 40000 அலகு

உற்பத்தி சாத்திய வளையியை வரைக.

81. ஒரு பொருளாதாரம் X, Y ஆகிய இரு பொருட்களை முறையே கிடையச்சிலும், நிலைக்குத்தச்சிலும் உற்பத்தி செய்கிறது. X இன் தொழில்நுட்பம் முன்னேற்றம் அடைகிறது;

82. ஒரு பொருளாதாரம் X, Y ஆகிய இரண்டு பொருட்களை முறையே கிடையச்சிலும், நிலைக்குத்தச்சிலும் உற்பத்தி செய்கிறது. Y இன் தொழில்நுட்பம் முன்னேற்றம் அடைகிறது.

83. ஒரு பொருளாதாரம் X, Y ஆகிய இரு பொருட்களை முறையே கிடையச்சிலும், நிலைக்குத்தச்சிலும் உற்பத்தி செய்கிறது. X இன் தொழில்நுட்பம் வீழ்ச்சி அடைகின்றது.

84. ஒரு பொருளாதாரம் X, Y ஆகிய இரு பொருட்களை முறையே கிடையச்சிலும், நிலைக்குத்தச்சிலும் உற்பத்தி செய்கிறது. Y இன் தொழில்நுட்பம் வீழ்ச்சி அடைகிறது.

85. ஒரு பொருளாதாரம் X, Y ஆகிய இரு பொருட்களை முறையே கிடையச்சிலும், நிலைக்குத்தச்சிலும் உற்பத்தி செய்கிறது. Y இன் தொழில்நுட்பம் வீழ்ச்சியடைய, இன் தொழில்நுட்பம் முன்னேற்றம் அடைகின்றது.

86. ஒரு பொருளாதாரம் X, Y ஆகிய இரண்டு பொருட்களை கிடையச்சிலும், நிலைக்குத்தச்சிலும் உற்பத்தி செய்கிறது. X இன் தொழில்நுட்பம் வீழ்ச்சியடைய, இன் தொழில்நுட்பம் முன்னேற்றம் அடைகின்றது.

87. ஒரு பொருளாதாரம் X, Y ஆகிய இரு பொருட்களை உற்பத்தி செய்கின்றது. X இன் தொழில் நுட்ப முன்னேற்றத்திலும் பார்க்க Y இன் தொழில் நுட்ப முன்னேற்றம் கூடுதலாக உள்ளது.

88. ஒரு பொருளாதாரம் X, Y ஆகிய இரண்டு பொருட்களை முறையே கிடையச்சிலும் நிலைக்குத்தச்சிலும் உற்பத்தி செய்கிறது. Y இன் தொழில்நுட்ப முன்னேற்றத்திலும் பார்க்க X இன் தொழில்நுட்ப முன்னேற்றம் கூடுதலாக உள்ளது.

89. ஒரு பொருளாதாரம் X, Y ஆகிய இரண்டு பொருட்களை முறையே கிடையச்சிலும் நிலைக்குத்தச்சிலும் உற்பத்தி செய்கிறது. X இன் தொழில்நுட்ப வீழ்ச்சியிலும் பார்க்க, Y இன் தொழில்நுட்ப வீழ்ச்சி கூடுதலாக உள்ளது.

90. ஒரு பொருளாதாரம் X, Y ஆகிய இரு பொருட்களை முறையே கிடையச்சிலும், நிலைக்குத்தச்சிலும் உற்பத்தி செய்கிறது. Y இன் தொழில்நுட்ப வீழ்ச்சியிலும் பார்க்க X இன் தொழில்நுட்ப வீழ்ச்சி கூடுதலாக உள்ளது.

91. ஒரு பொருளாதாரம் X, Y ஆகிய இரண்டு பொருட்களை முறையே கிடையச்சிலும், நிலைக்குத்தச்சிலும் உற்பத்தி செய்கிறது. X இன் தொழில்நுட்ப வள ஒதுக்கீட்டு அதிகரிப்பு.

92. ஒரு பொருளாதாரம் X, Y ஆகிய இரண்டு பொருட்களை முறையே கிடையச்சிலும், நிலைக்குத்தச்சிலும் உற்பத்தி செய்கிறது. Y இன் வளங்களின் ஒதுக்கீட்டு அதிகரிப்பு.

93. ஒரு பொருளாதாரம் A, B ஆகிய இரு பொருட்களை முறையே கிடையச்சிலும், நிலைக்குத்தச்சிலும் உற்பத்தி செய்கிறது. A நிலச் செறிவான தொழில்நுட்பத்தையும் B ஊழியச் செறிவான தொழில்நுட்பத்தையும் கையாளுகிறது. அப் பொருளாதாரம் செழிப்பான நிலவளத்தைக் கண்டுள்ள அதே வேளையில், ஊழியத் தொழில் நுட்பம் வீழ்ச்சியடைகின்றது.

94. ஒரு பொருளாதாரம் A, B ஆகிய இரு பொருட்களை உற்பத்தி செய்கிறது. A உற்பத்தியில் மூலதன செறிவான தொழில்நுட்பமும், B யில் ஊழியச் செறிவான தொழில்நுட்பமும் பயன்படுத்தப்படுகிறது.

94 இன் தொடர்ச்சி...

மூலதனச் செறிவான தொழில்நுட்பம் முன்னேற்-றமடைய ஊழியச் செறிவான தொழில்நுட்பம் வீழ்ச்சியடைகிறது.

95. ஒரு பொருளாதாரம் A , B இரு பொருட்களை உற்பத்தி செய்கிறது. A யில் மூலதனச் செறிவான தொழில் நுட்ப முன்னேற்றத்திலும் பார்க்க B யில் ஊழியச் செறிவான தொழில் நுட்ப முன்னேற்றம் கூடுதலாக உள்ளது.

96. ஒரு பொருளாதாரம் A , B ஆகிய உற்பத்திகளை முறையே மூலதனச் செறிவு, ஊழியச் செறிவு தொழி-ல்நுட்பத்தையும் பயன்படுத்தி உற்பத்தி செய்கிறது. மூலதனச் செறிவான தொழில்நுட்பம் வீழ்ச்சி அடைகின்றது.

97. ஒரு பொருளாதாரம் A , B ஆகிய இரு பொருட்களை மூலதனச் செறிவான தொழில்நுட்பம், ஊழியச் செறிவான தொழில் நுட்பத்தையும் பயன்படுத்துகிறது. ஊழியச் செறிவான தொழில்நுட்பம் வீழ்ச்சியடைகிறது.

98. M , N ஆகிய இரு நாடுகள் விவசாயப் பொருள், கைத்தொழில் பொருள் ஆகிய பொருட்களை உற்பத்தி செய்கிறது. M ஓர் அபிவிருத்தி அடைந்த நாடு எனவும், N அபிவிருத்தி அடைந்து வரும் நாடு என்பதையும் கருதுக. இதனை வரிப்படத்தில் காட்டுக.

99. ஒரு பொருளாதாரம் P, Q ஆகிய இரு பொருட்களை உற்பத்தி செய்கிறது. P யில் மூலதனத்தை மட்டும் பயன்படுத்தலாம். Q வில் ஊழியத்தை மட்டும் பயன்படுத்தலாம் எனின் படத்தை வரைக.

100. ஒரு பொருளாதாரம் A, B ஆகிய பொருட்களை உற்பத்தி செய்கிறது. A யின் தொழில் நுட்பம் வீழ்ச்சியடைகின்ற வீதமும், B யின் தொழில்நுட்பம் வீழ்ச்சி அடைகின்ற வீதமும் சமனகக் காணப்படுகின்றது.

** சரி, பிழை என மட்டும் கூறுக. **

(பிழையான விடைகளுக்கு புள்ளிகள் கழிக்கப்படும்)

101. ஓர் உற்பத்தி சாத்திய வளையியில் எதாயினும் இரண்டு பொருட்களை மட்டுமே காட்ட முடியும்.

102. உற்பத்தி சாத்திய வளையி வலப்பக்கம் நகர்வது பொருளாதார வளர்ச்சியைக் குறிக்கும்.

103. உற்பத்தி சாத்திய வளையிக்கு உட்புறத்தில் ஓர் புள்ளி காணப்பட்டால், அது வேலையின்மையைக் குறிக்கும்.

104. உற்பத்தி சாத்திய வளையியில் வெளிப்புறத்தில் ஓர் புள்ளியில் உற்பத்தி நடைபெற்றால், அது பொருளாதார வளர்ச்சியாகும்.

105. உற்பத்தி சாந்திய வளையியில் ஒரு புள்ளி காணப் பட்டால் அது நிறை தொழில் மட்டமாகும்.

106. உற்பத்தி சாத்திய வளையியின் வெளிப்புறத்தில் ஓர் புள்ளி காணப்பட்டால், அது உற்பத்திக்கு சாத்தியமற்ற பகுதியாகும்.

107. உற்பத்தி சாத்திய வளையியில் இரு புள்ளிகள் காணப்பட்டால், அது வள ஒதுக்கீட்டு அதிகரிப்பாகும்.

108. உற்பத்தி சாத்திய வளையியின் ஒரு பக்க வெளி நகர்வு தொழில்நுட்ப வீழ்ச்சியைக் குறிக்கும்.

109. ஓர் உற்பத்தி சாத்திய வளையியின் ஒருபக்க உட்புற நகர்வு, தொழில்நுட்ப முன்னேற்றத்தை குறிக்கும்.


110. ஓர் உற்பத்தி சாத்திய வளையி வலப்பக்கம் நோக்கி நகருமாயின், இரு பொருட்களின் தொழில்நுட்ப முன்னேற்றத்தைக் குறிக்கும்.

<u>சரியான விடையின் கீழ் கோடிடுக.</u>

111. C, D என்ற வலப்பக்க நகர்வு குறிப்பது;

அ) கிடையச்சிலும், நிலைக்குத்தச்சிலும் தொழில்நுட்ப முன்னேற்றம்.

ஆ) பொருளாதார வளர்ச்சியை.



111 இன் தொடர்ச்சி...

இ) இரு பொருட்களுக்கான கேள்வி அதிகரித்தமை.


ஈ) நிறை தொழில் மட்டம்.

சரியான விடை;

1) 'அ' மட்டும் 2) 'ஆ' மட்டும்

3) 'அ', 'ஆ' 4) எல்லாம் சரி

112. P யில் இருந்து Q வுக்கு புள்ளி நகர்வது;




அ) இயந்திரத்தின் வள ஒதுக்கீட்டு அதிகரிப்பு.

ஆ) புடவையின் அமையச் செலவு.

இ) நிறை தொழில் மட்டம்.


ஈ) வேலையின்மை.

சரியான விடை;

1) 'அ' மட்டும் 2) 'அ', 'ஆ'

3) 'இ' மட்டும் 4) எல்லாம் சரி

113. N இல் இருந்து M க்கு புள்ளி நகர்வது;




அ) தேயிலையின் வள ஒதுக்கீட்டு அதிகரிப்பு.

ஆ) நிறை தொழில் மட்டம்

இ) சீனியின் அமையச் செலவு.

ஈ) பொருளாதார வளர்ச்சி.

1) அ 2) ஆ 3) அ,இ 4) எல்லாம்

## பொருளாதார பிரச்சனைகள்

1. ஓர் பொருளாதாரத்தின் அடிப்படை பொருளாதாரப் பிரச்சனைகள் எவை? ஏன் அப் பிரச்சனைகள் தோன்றுகின்றன?

2. "என்ன பொருளை, எந்தளவு உற்பத்தி செய்வது" ;
   அ) என்ற பிரச்சனையின் இருந்து விளங்குவது என்ன?
   ஆ) ஏன் இப் பிரச்சனை தோன்றுகிறது?
   இ) தனியார் தாளாண்மை பொருளாதாரம் எப்படி இதைத் தீர்க்கின்றது?
   ஈ) சம உடமை பொருளாதாரம் எப்படி தீர்க்கிறது?
   உ) கலப்பு பொருளாதாரம் எப்படி தீர்க்கிறது?

3. எப்படி அல்லது எவ்வாறு உற்பத்தி செய்தல்:
   அ) இப் பிரச்சனையின் கருத்து என்ன?
   ஆ) ஏன் இப் பிரச்சனை தோன்றுகிறது?
   இ) முதலாளித்துவ பொருளாதாரம் எப்படி தீர்க்கிறது?
   ஈ) சம உடமை எப்படி தீர்க்கிறது?
   உ) கலப்பு எப்படி தீர்க்கிறது?

4. யாருக்கு உற்பத்தி செய்தல்:
   அ) இப் பிரச்சனையின் கருத்து என்ன?
   ஆ) ஏன் இப் பிரச்சனை தோன்றுகிறது?
   இ) கட்டில்லா பொருளாதாரம் எப்படி இதைத் தீர்க்கிறது?
   ஈ) சோசலிச பொருளாதாரம் எப்படி இதைத் தீர்க்கிறது?
   உ) கலப்பு பொருளாதாரம் எப்படி இப் பிரச்சனையைத் தீர்க்கிறது?

5. முதலாளித்துவ பொருளாதாரத்தின் சிறப்பியல்புகள் எவை?

6. சோசலிச பொருளாதாரத்தின் சிறப்பியல்வுகள் எவை?

7. கலப்பு பொருளாதாரத்தின் சிறப்பியல்வுகள் எவை?

8. முதலாம், இரண்டாம், மூன்றும் மண்டல நாடுகள் என்றால் என்ன? அது எப்படி எழுந்தது?

9. முதலாளித்துவம், சம உடமை, கலப்பு, என்ற பொருளாதார முறைமை எப்படி எழுந்தது?

10. முதலாம் மண்டல நாடுகளின் சிறப்பியல்புகள் எவை?

11. மூன்றும் மண்டல நாடுகளின் சிறப்பியல்புகள் எவை?

12. முதலாளித்துவ பொருளாதாரத்தில் நுகர்வோன் இறைமை உண்டு. இதை விளக்குக.

13. விலைப் பொறிமுறை என்றால் என்ன?

14. மத்திய திட்டமிடல் குழு என்றால் என்ன?

15. முதலாளித்துவ பொருளாதாரத்தில் செல்வமானது சிலரின் கையிலேயே செறிந்துள்ளது. இதை விளக்குக.

16. அ) சம உடமை பொருளாதாரத்திலும் லாபம் உண்டு.

ஆ) சம உடமை பொருளாதாரத்திலும் விலை உண்டு.

17. முதலாளித்துவ பொருளாதாரத்தில் ஊழியமானது உற்பத்தி சாதனங்களின் உடமையிலிருந்து தவிர்க்கப்படுகின்றது.

18. தனியார் தாளாண்மை பொருளாதாரத்தின் லாபத்தின் பங்கு.

19. வடக்கும் தெற்கும், கலந்துரையாடல் என்றால் என்ன?

20. "கலப்பு பொருளாதாரத்தில் முயற்சியாளன் பல்வேறு வடிவம் எடுப்பான்". இதை விளக்குக.

<u>சரியான விடையின் கீழ் கோடிடுக.</u>

21. ஒரு பொருளாதாரத்தின் அடிப்படை பிரச்சனைகள்

அ) என்ன பொருளை எந்தளவு, எப்படி, யாருக்கு உற்பத்தி செய்தல்.

ஆ) அருமை, தெரிவு, பரிமாற்றம்.

இ) உற்பத்திக் காரணிகளை எவ்வாறு முழுமையாக பயன்படுத்துவது.

ஈ) நாட்டின் வருமானத்தை எவ்வாறு சமமாக பங்கிடுவது.

22. அடிப்படை பொருளாதார பிரச்சனை தோன்றக் காரணம்,

அ) மனித விருப்பங்கள் அளவற்றனவாயும், அவற்றை பூர்த்தி செய்கின்ற வளங்கள் மனித தேவையுடன் ஒப்பிடும் போது வரையறுக்கப்பட்டதாகவும் இருப்பதுமாகும்.

ஆ) சில நாடுகளில் மூலதன செறிவான தொழில் நுட்பமும், சில நாடுகளில் ஊழியச் செறிவான தொழில் நுட்பமும் காணப்படுவதாகும்.

இ) சில நாடுகள் அபிவிருத்தியடைந்த நாடாகவும் வேறு சில நாடுகள் அபிவிருத்தி அடைந்து வரும் நாடாகவும் இருப்பது.

ஈ) மேற்கூறிய யாவும் தவறானவை.

23. அடிப்படைப் பொருளாதாரப் பிரச்சனை எச் சமூகத்தில் காணப்படுகின்றது எனில்,,,

அ) எல்லா சமூகங்களிலும்.

ஆ) முதலாளித்துவ பொருளாதாரத்தில், ஏனெனில் அங்கே இப் பிரச்சனையைத் தீர்க்க முடியாது உள்ளது.

இ) அபிவிருத்தி குறைந்த நாடுகளில், ஏனெனில், இப் பிரச்சனை இருப்பதாலேயே அது அபிவி-ருத்தி அடையவில்லை.

ஈ) மேற்கூறிய யாவும் பிழை.

24. எதனை உற்பத்தி செய்தல் என்ற பிரச்சனையின் கருத்து,

அ) ஆடம்பரப் பொருளையா? அத்தியாவசியப் பொருளையா உற்பத்தி செய்வது என்பதாகும்.

ஆ) ஒரு பொருளாதாரம் தன்னிடமுள்ள வளத்தை எந்த பொருளின் உற்பத்தி நோக்கில் ஒதுக்கீடு செய்வதென்ற வள ஒதுக்கீட்டு பிரச்சனை.

இ) உற்பத்தியாளர் நுகர்வோன் விரும்பும் பொருளினை உற்பத்தி செய்வதா இல்லையா என்பதாகும்.

ஈ) மேற்கூறிய யாவும் தவறு.

25. எதனை உற்பத்தி செய்வது என்ற பிரச்சனை தோன்றக் காரணம்.

அ) வளங்கள் மாற்று உபயோக தன்மையைப் பெற்றமை.

ஆ) வளங்கள் அருமையாக இருத்தல்.

இ) சில நாடுகளில் வளங்கள் பற்றுக்குறையாக இருத்தல்.

ஈ) மேற்கூறிய யாவும் தவறு.

26. எதனை உற்பத்தி செய்வது என்ற பிரச்சனை எழாமல் இருக்க வேண்டுமாயின்,

அ) வளங்கள் மாற்று உபயோகம் அற்றதாக இருக்க வேண்டும்.

ஆ) சமூகத்தின் தேவை குறைவாக இருக்க வேண்டும்.

26 இன் தொடர்ச்சி.....

இ) வளங்கள் அருமை அற்றதாக இருக்க வேண்டும்.
ஈ) ஆடம்பர பொருளை உற்பத்தி செய்யக் கூடுதலான வளம் இருத்தல்,

27. வள ஒதுக்கீட்டு பிரச்சனை என்பது,

அ) எதனை உற்பத்தி செய்தல்.
ஆ) எப்படி உற்பத்தி செய்தல்.
இ) யாருக்கு உற்பத்தி செய்தல்.
ஈ) மேற்கூறிய யாவும் தவறு.

28. எப்படி உற்பத்தி செய்வதென்பது,

அ) உற்பத்திக் காரணிகளின் விலையுடன் சம்பந்தப்பட்டது.
ஆ) தொழில்நுட்ப தேர்வுடன் சம்பந்தப்பட்டது.
இ) உற்பத்தி செய்ய வேண்டிய பொருளைத் தேர்ந்தெடுப்பது.
ஈ) மூலதன செறிவான தொழில்நுட்பத்தைத் தேர்ந்தெடுப்பது.

29. எப்படி உற்பத்தி செய்தல் என்ற பிரச்சனை தோன்றக் காரணம்,

அ) ஒன்றுக்கு மேற்பட்ட தொழில்நுட்பம் காணப்படுகின்றது.
ஆ) எல்லா நாடுகளிலும் மூலதனப் பற்றுக்குறை இருப்பது.
இ) உற்பத்திக் காரணிகள் பூரண பயன்பாடாக இருத்தல்.
ஈ) மேற்கூறிய யாவும் தவறு.

30. எவ்வாறு உற்பத்தி செய்தல் என்ற பிரச்சனை தோன்றமல் இருக்க வேண்டுமாயின்,

அ) ஒரு தொழில் நுட்பம் மட்டும் இருத்தல் வேண்டும்.

ஆ) வளங்கள் மேலதிகமாக இருத்தல்.

இ) வளங்கள் மாற்று உபயோகம் அற்றதாக இருத்தல்.

ஈ) வளங்கள் பூரண தேர்ச்சியுடையதாக இருத்தல்.

31. மூலதன செறிவான தொழில்நுட்பம் என்பது,

அ) மூலதனம் கூடுதலாக இருத்தல்.

ஆ) மூலதனம் மட்டும் காணப்படல்.

இ) மூலதனம் மட்டும் கூடுதலாக இருத்தல்.

ஈ) ஊழியத்துடன் ஒப்பிடும் போது மூலதனம் கூடுதலாக இருத்தல்.

32. ஊழியச் செறிவான தொழில்நுட்பம் என்பது,

அ) ஊழியம் கூடுதலாகக் காணப்படல்.

ஆ) ஊழியம் மட்டும் காணப்படல்.

இ) மூலதனத்துடன் ஒப்பிடும் போது ஊழியம் கூடுதலாக இருத்தல்.

ஈ) மேற்கூறிய யாவும் பிழை.

33. நடுத்தர தொழில்நுட்பம் என்பது,

அ) ஊழியம் மூலதனந் குறைவாக இருத்தல்.

ஆ) ஊழியமும் மூலதனமும் கூடுதலாகவிருத்தல்.

இ) ஊழியத்துடன் ஒப்பிடும் போது மூலதனமும் சமனாக இருத்தல்.

ஈ) மேற்கூறிய யாவும் தவறு.

34. தொழில்நுட்ப தேர்வு சம்பந்தமான பிரச்சனை என்பது,

அ) எப்படி உற்பத்தி செய்தல்.
ஆ) எதனை உற்பத்தி செய்தல்.
இ) யாருக்கு உற்பத்தி செய்தல்.
ஈ) மேற்கூறிய ஒன்றுமில்லை.

35. யாருக்கு உற்பத்தி செய்வதென்பது,

அ) வள ஒதுக்கீட்டுப் பிரச்சனையாகும்.
ஆ) தொழில்நுட்ப தேர்வு சம்பந்தமான பிரச்சனை.
இ) உற்பத்தி காரணிகளின் வருமானங்களோடு சம்பந்தப்பட்டது.
ஈ) மேற்கூறிய ஒன்றுமில்லை.

36. யாருக்கு உற்பத்தி செய்வது என்ற பிரச்சனையின் கருத்து,

அ) செல்வந்தர்களுக்கா அல்லது வறியவர்களுக்கா உற்பத்திப் பொருளை பங்கிடுவது.
ஆ) நாட்டின் மொத்த உற்பத்தியினை அவ் உற்பத்தியில் பங்கு பற்றிய உற்பத்திக் காரணிகளின் உடமையாளருக்கிடையே எவ்வாறு பங்கிடுவது?
இ) உற்பத்தி செய்யப்பட்ட பொருளை மக்களுக்கு இடையே எவ்வாறு சமமாகப் பங்கிடுவது.
ஈ) மேற்கூறிய எல்லாம் சரியானது.

37. யாருக்கு உற்பத்தி செய்வது என்ற பிரச்சனை தோன்றக் காரணம்,

அ) நாட்டின் தலா வருமானம் குறைவாகவிருத்தல்.

37. ின் தொடர்ச்சி.....

ஆ) உற்பத்திக் காரணிகளின் உடமையாளர்கள் வெவ்வேறுபட்ட வருமானங்களைப் பெறுவது.

இ) உற்பத்தியின் பெரும் பங்கு நாட்டின் செல்வந்தராக இருத்தல்.

ஈ) மேற்கூறிய எல்லாம் சரியானது.

38. வருமானப் பங்கீட்டுடனும் பொருள் பங்கீட்டுடனும் தொடர்புடைய பிரச்சனை,

அ) எப்படி உற்பத்தி செய்தல்.

ஆ) எதனை உற்பத்தி செய்தல்.

இ) எந்தளவு உற்பத்தி செய்தல்.

ஈ) மேற்கூறிய யாவும் பிழை.

39. யாருக்கு உற்பத்தி செய்வதென்ற பிரச்சனை தோன்றாமல் இருக்க வேண்டுமாயின்,

அ) எல்லோரும் சமமான வருமானத்தைப் பெற வேண்டும்.

ஆ) எல்லோரும் சமமான ஊழியத்தைப் பெற வேண்டும்.

இ) உற்பத்திக் காரணிகளின் உடமையாளர் ஒரேயளவான காரணிச் சேவையை வழங்குதல் வேண்டும்.

ஈ) மேற்கூறிய எல்லாம் சரியானது.

40. வெவ்வேறுபட்ட பொருளாதார அமைப்புத் தோன்றக் காரணம்,

அ) சமூகங்கள் வித்தியாசமான பொருளாதாரப் பிரச்சனையை எதிர் நோக்குவது.

ஆ) வளங்கள் அருமையாக இருத்தல்.

இ) பொருளாதார பிரச்சனைகள் தீர்வு வேறுபடுவது.

ஈ) வளங்கள் மாற்று உபயோகமாக இருத்தல்.

41. வெவ்வேறுபட்ட பொருளாதார அமைப்பு என்பது,

அ) அருமை, தெரிவு, பரிமாற்றம்.

ஆ) எதனை, எப்படி, யாருக்கு.

இ) முதலாளித்துவம், சம உடமை, கலப்பு.

ஈ) முதலாம் மண்டலம், இரண்டாம் மண்டலம், மூன்றும் மண்டலம்.

42. எதனை, எப்படி, யாருக்கு உற்பத்தி செய்வது என்ற பொருளாதாரப் பிரச்சனை தோன்றியமையிலேயே முதலாளித்துவம், கலப்பு, சமவுடமை என்பன தோன்றின.

அ) மேலே உள்ள கூற்று சரியானது.

ஆ) தவறானது.

இ) அரைவாசி சரியானது.

ஈ) மேற்கூறியவை எல்லாம் தவறு.

43. முதலாளித்துவம், சம உடமை, கலப்பு என்ற பொருளாதார அமைப்பு தோன்ற காரணம்,

அ) தீர்வு முறைகள் வேறுபடுவது.

ஆ) அடிப்படை பிரச்சனை வேறுபடுவது.

43. இன் தொடர்ச்சி.....

இ) மண்டலங்கள் வேறுபடுவது.
ஈ) மேற்கூறிய ஒன்றும் இல்லை.

44. முதலாளித்துவ பொருளாதாரமானது தனது பிரச்சனையை,
அ) விலைப் பொறிமுறை மூலம் தீர்க்கிறது.
ஆ) மத்திய திட்டமிடல் குழு முறை மூலம் தீர்க்கிறது.
இ) இரண்டாலும் தீர்த்து வைக்கிறது.
ஈ) லாப நோக்கத்தால் தீர்த்து வைக்கிறது.

45. முதலாளித்துவ பொருளாதாரத்தின் சிறப்பம்சங்கள் சில;
அ) தனியார் சொத்துடமை, தனியார் முயற்சி, லாப நோக்கம், விலைப் பொறிமுறை பிரச்சனையை தீர்க்கிறது.
ஆ) தனியார் சொத்துடமை, சேவை நோக்கம், அரச முயற்சி, விலைப் பொறிமுறை பிரச்சனையைத் தீர்க்கிறது.
இ) தனியார் முயற்சியும், அரச முயற்சியும், லாபமும் சேவையும்.
ஈ) மேற்கூறிய எவற்றையும் கூற முடியாது.

46. தூய முதலாளித்துவ பொருளாதாரம் என்பது,
அ) லாப நோக்கங் கொண்ட பொருளாதாரம்.
ஆ) சேவை நோக்கங்கொண்ட பொருளாதாரம்.

46. இன் தொடர்ச்சி...

இ) அரசாங்கத் தலையீடு இல்லாத பொருளா-
தாரம்.

ஈ) அரசாங்கத் தலையீடு இல்லாத முதலாளித்துவ
பொருளாதாரம்.

47. இன்று நடைமுறையில் தூய முதலாளித்துவ பொருளா
தாரம் என்பது,

அ) இல்லை. ஆ) உண்டு.

இ) கூற முடியாது.

ஈ) ஓரளவு ஏற்றுக் கொள்ள முடியும்.

48. விலைப் பொறிமுறை என்பது,

அ) கேள்வி நிரம்பலால் நிர்ணயிக்கப்பட்ட
விலையின் செயற்பாடு.

ஆ) உற்பத்தியாளரால் நிர்ணயிக்கப்பட்ட விலையின்
செயற்பாடு.

இ) நுகர்வோரால் நிர்ணயிக்கப்பட்ட விலையின்
செயற்பாடு.

ஈ) அரசாங்கத்தால் நிர்ணயிக்கப்பட்ட விலையின்
செயற்பாடு.

49. முதலாளித்துவ பொருளாதாரத்தில்,

அ) ஆடம்பர பொருள் உற்பத்தி செய்யப்படும்.

ஆ) அத்தியாவசியப் பொருள் உற்பத்தி செய்யப்
படும்.

இ) அதிக லாபம் தரக்கூடிய எப் பொருளாயினும்
உற்பத்தி செய்யப்படும்.

ஈ) நுகர்வோனின் விருப்பமான பொருட்கள்.

50. விலை பொறிமுறை எதனை உற்பத்தி செய்தல் என்றவள ஒதுக்கீட்டுப் பிரச்சனையை,

அ) ஆடம்பர பொருளின் உற்பத்தி நோக்கி வளத்தை ஒதுக்கீடு செய்கிறது.

ஆ) அத்தியாவசிய பொருட்கள் மீது வளத்தை ஒதுக்கீடு செய்கிறது.

இ) சந்தையில் எப்பொருளுக்கு விலை அதிகமோ அப் பொருளின் உற்பத்தி நோக்கியே வளம் ஒதுக்கீடு செய்யப்படும்.

ஈ) நுகர்வோனின் நலன் கருதி வளங்கள் ஒதுக்கீடு செய்யப்படும்.

51. முதலாளித்துவம் தனது உற்பத்திக்கு,

அ) ஊழியச் செறிவான தொழில்நுட்பத்தைத் தெரிவு செய்யும்.

ஆ) மூலதன செறிவான தொழில்நுட்பத்தைத் தெரிவு செய்யும்.

இ) ஒப்பீட்டு ரீதியில் மலிவான தொழில் நுட்பத்தைத் தெரிவு செய்யும்.

ஈ) நடுத்தரத்தைத் தெரிவு செய்யும்.

52. விலைப் பொறிமுறையானது எவ்வாறு உற்பத்தி செய்வது என்பதை,

அ) உற்பத்தியாளரின் விருப்பத்திற்கேற்ப தொழில்நுட்பத்தை தேர்ந்தெடுக்கிறது.

ஆ) அரசாங்க விருப்பத்திற்கேற்ப தொழில் நுட்பத்தைத் தேர்ந்தெடுக்கின்றது.

52. இன் தொடர்ச்சி...

இ) ஒப்பீட்டு ரீதியில் மலிவான தொழில்நுட்பத்தை தேர்ந்தெடுக்கும்.

ஈ) மேற்கூறிய எல்லாம் சரியானது.

53. முதலாளித்துவ பொருளாதாரத்தில் மொத்த உற்பத்தி எவ்வாறு பங்கிடப்படுகிறது எனின்,

அ) அரசாங்கத்தின் விருப்பத்திற்கேற்ப.

ஆ) அரசாங்க பங்கீட்டுக்கு ஏற்ப.

இ). மொத்த உற்பத்திக்கு ஒவ்வொரு உற்பத்திக் காரணிகளின் உடமையாளர் வழங்கிய பங்கு-க்கு ஏற்ப.

ஈ) இப் பிரச்சனையே அங்கு கிடையாது.

54. தனி உரிமை நிறுவனம் என்பது,

அ). ஒரே ஒரு உற்பத்தி நிறுவனம் உற்பத்தியில் ஈடுபடுவது.

ஆ) பல நிறுவனங்கள் உற்பத்தியில் ஈடுபடுவது.

இ) அரசாங்கம் உற்பத்தியில் ஈடுபடுவது.

ஈ) மேற்கூறிய எல்லாம் சரியானது.

55. முதலாளித்துவ பொருளாதாரத்தில் அரசாங்கம் தலையிடக் காரணம்,

அ) சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைபெற.

ஆ) சட்ட விரோத உற்பத்திகளை கட்டுப்படுத்த.

இ) தனியார் உற்பத்தி செய்து வழங்காத உற்பத்தியை உற்பத்தி செய்ய.

ஈ) வருமான பங்கீட்டை ஓரளவு சமப்படுத்த.

55. இன் தொடர்ச்சி...

உ) தனியுரிமையைக் கட்டுப்படுத்த.
ஊ) பொருளாதார உறுதியையும் அபிவிருத்தியையும் வேண.
எ) மேற்கூறிய எல்லாம் சரியானது.

56. முதலாளித்துவ பொருளாதாரத்தில் நுகர்வோன் இறமை காணப்படுகிறது என்பது;

அ) சரியானது. ஆ) தவறானது.
இ) ஓரளவு சரியானது.
ஈ) மேற்கூறிய யாவும் பிழை.

57. முதலாளித்துவ பொருளாதாரத்தில் நுகர்வோ-னுக்கு இறமை காணப்படுவது எப்போதெனில்,

அ) போட்டிச் சந்தையின் போது.
ஆ) தனி உரிமையின் போது.
இ) அரசாங்க கட்டுப்பாட்டின் போது.
ஈ) சிலருரிமையின் போது.

58. முதலாளித்துவ பொருளாதாரத்தில் எப்போது நுகர்வோன் சுதந்திரம் பறிக்கப்படுமாயின்,

அ) தனி உரிமையின் போதும், அரசாங்கத் தலையீட்டின் போதும்.
ஆ) போட்டிச் சந்தையின் போது.
இ) போட்டிச் சந்தையின் போதும் தனியுரி-மையின் போதும்.
ஈ) சிலருரிமையின் போதும், அரசாங்கத் தலையீட்டின் போதும்.

59. "செல்வமானது முதலாளித்துவ பொருளாதாரத்தில் சிலரின் கையிலேயே செறிந்துள்ளது". அந்தச் சிலர் என்பது,

அ) முதலாளி வர்க்கம்.

ஆ) தொழிலாளி வர்க்கம்.

இ) அரசாங்க அமைச்சர்கள்.

ஈ) கூட்டுத் தாபனங்கள்.

60. முதலாளித்துவ பொருளாதாரத்தில் உற்பத்திக் காரணிகளின் உடமையாளர்,

அ) முதலாளி வர்க்கம்.

ஆ) தொழிலாளி வர்க்கம்.

இ) அரசாங்கம்.

ஈ) மேற்கூறிய ஒன்றும் இல்லை.

61. அங்கு ஊழிய வர்க்கம் உற்பத்திச் சாதனங்களின் உடமையில் இருந்து தவிர்க்கப்படுவதற்குக் காரணம்,

அ) அவர்களிடம் குறிப்பாக மூலதனம் இல்லை.

ஆ) அவர்களுக்கு விருப்பம் இல்லை.

இ) அரசாங்கம் தடையை விதிக்கிறது.

ஈ) முதலாளி வர்க்கம் சுரண்டுகிறது.

62. முதலாளித்துவ பொருளாதாரத்தில் முதலாளி வர்க்கமே உற்பத்தியில் ஈடுபடுகிறது. இதற்குக் காரணம்,

அ) ஊழிய வர்க்கத்திற்கு விருப்பம் இல்லை.

ஆ) முதலாளியிடமே மூலதனம் உண்டு.

இ) அரசாங்கக் கட்டளை.

ஈ) மேற்கூறிய எல்லாம் சரியானவை.

63. பின்வருவனவற்றில் முதலாளித்துவ பொருளாதாரம் சம்பந்தமான இவருனவை இரண்டும் எவை எனக் காட்டுக.

அ) அங்கு அரசாங்க முயற்சி மட்டும் உண்டு.
ஆ) அங்கு லாப நோக்கமே முக்கிய நோக்கம்.
இ) விலைபொறிமுறை அப் பிரச்சனைகளைத் தீர்த்து வைக்கிறது.
ஈ) செல்வம் எல்லோர் கையிலும் உண்டு.

64. பின்வருவனவற்றில் முதலாளித்துவ பொருளாதாரம் சம்பந்தமாக சரியான இரண்டும் எவை?

அ) தனியார் முயற்சி மட்டும் இல்லை.
ஆ) நுகர்வோர் இறைமை காணப்படுகிறது.
இ) ஒப்பீட்டு ரீதியில் மலிவான தொழில்நுட்பத்தையே தேர்ந்தெடுக்கும்.
ஈ) மூலதன செறிவான தொழில்நுட்பம் தெரிந்து எடுக்கும்.

65. முதலாளித்துவ பொருளாதாரம் சம்பந்தமாக எது அரைவாசி சரியானது?

அ) நுகர்வோன் இறைமை காணப்படுகிறது.
ஆ) விலைப் பொறிமுறை செயல்படுத்துகிறது.
இ) கூடிய விலை உடைய பொருளே உற்பத்தி செய்யப்படும்.
ஈ) கூடிய காரணி சேவையை வழங்கியவருக்கே கூடுதலான வருமானம் பங்கிடப்படும்.

66. சோசலிச பொருளாதாரம் சம்பந்தமான சில கருத்துக்கள் எவையெனில்,

அ) அரச முயற்சி காணப்படும்.

ஆ) அரச சொத்துடமை காணப்படும்.

இ) சேவை நோக்கம்.

ஈ) மத்திய திட்டமிடல் குழு பிரச்சனையைத் தீர்க்கும்.

1) அ மட்டும் சரி

2) ஆ , இ மட்டும்

3) அ , ஆ , இ மட்டும்

4) எல்லாம் சரி.

67. மத்திய திட்டமிடல் குழு என்பது,

அ) அரசினல் நியமிக்கப்பட்ட ஒரு குழு.

ஆ) மக்களால் நியமிக்கப்பட்ட குழு.

இ) சந்தை சக்தியால் நியமிக்கப்பட்ட குழு.

ஈ) மேற்கூறிய எல்லாம் சரியானது.

68. சம உடமை பொருளாதாரத்தில் எதனை உற்பத்தி செய்தல் என்றவள ஒதுக்கீட்டுப் பிரச்சனை தீர்க்கப்படுவது,

அ) அத்தியாவசிய பொருளை உற்பத்தி செய்வதன் மூலம்.

ஆ) மத்திய திட்டமிடல் குழு தனது விருப்பத்துக்கேற்ப.

இ) அரசும் தனியாரும் சேர்ந்து உற்பத்தி செய்யும்.

ஈ) தேவைகளின் முன்னுரிமையின் அடிப்படையில்.

69. மத்திய திட்டமிடல் குழு எப்படி உற்பத்தி செய்வது என்ற பிரச்சனையைத் தீர்ப்பது,

அ) உற்பத்திக் காரணிகளின் நிரம்பலின் அடிப் படையில்.

ஆ) ஒப்பீட்டு ரீதியில் குறைவான தொழில்நுட்ப அடிப்படையில்.

இ) மத்திய திட்டமிடல் குழுவின் விருப்பத்துக்கு ஏற்ப.

ஈ) மேற்கூறிய எல்லாம் சரி.

70. சோசலிச பொருளாதாரத்தில் யாருக்கு உற்பத்தி செய்வது என்ற பங்கீட்டுப் பிரச்சனை ஆனது பின்வருமாறு தீர்க்கப்படுகிறது.

அ) அனைத்து பொருட்களும் சமமாக பங்கிடப் -படுகிறது.

ஆ) அத்தியாவசிய பொருட்களை மட்டுமே சமமாக பங்கிடும்.

இ) காரணிகளின் விலைகளின் அடிப்படையில்.

ஈ) மேற்கூறிய ஒன்றும் இல்லை.

71. சம உடமை பொருளாதாரத்தில் லாபத்துக்கு உரிய செயல்பாடு ஒன்றும் இல்லை. இக் கூற்று,

அ) சரியானது. ஆ) தவறானது.

இ) அரைவாசி சரியானது.

ஈ) இப்படிப்பட்ட ஒரு கருத்தே இடம்பெற முடியாது.

72. சமஉடமை பொருளாதாரத்தின் பொருட்களின் விலை,

அ) சந்தை சக்தியால் நிர்ணயிக்கப்படுகிறது.
ஆ) மத்திய திட்டமிடல் குழுவினால் கட்டுப்படுத்திய விலையாகும்.
இ) அரசாங்கம் தன் விருப்பத்துக்கேற்ப விலையை தீர்மானிக்கும்.
ஈ) எல்லாம் சரி.

73. கலப்பு பொருளாதாரத்தில் பொருளாதாரப் பிரச்சனைகள்,

அ) விலைப் பொறிமுறை மூலம் தீர்க்கிறது.
ஆ) மத்திய திட்டமிடல் குழு முறை மூலம் தீர்க்கிறது.
இ) இரண்டாலும் தீர்க்கப்படுகிறது.
ஈ) மேற்கூறிய எல்லாம் தவறு.

74. கலப்பு பொருளாதாரத்தில்,

அ) அரச சொத்துடமையும், தனியார் சொத்துடமையும் உண்டு.
ஆ) அரச சொத்துடமை உண்டு.
இ) தனியார் சொத்துடமை உண்டு.
ஈ) மேற்கூறிய எல்லாம் சரி.

75. கலப்பு பொருளாதாரத்தில்,

அ) லாப நோக்கமும், சேவை நோக்கமும் காணப்படும்.
ஆ) லாப நோக்கம் மட்டும்.
இ) சேவை நோக்கம் மட்டும்.
ஈ) எல்லாம் சரி.

76. ஓர் கலப்பு பொருளாதாரத்தில்.

அ) தனியார் முயற்சியும், அரச முயற்சியும் காணப்படும்.

ஆ) தனியார் முயற்சி மட்டும்.

இ) அரச முயற்சி மட்டும்.

ஈ) எல்லாம் சரியானது.

77. ஓர் கலப்பு பொருளாதாரத்தில் எதனை உற்பத்தி செய்வது என்பதை.

அ) விலைப் பொறிமுறையும் மத்திய திட்டமிடல் குழுவாலும் லாப நோக்க அடிப்படையிலும் சேவை நோக்க அடிப்படையிலும் வள ஒதுக்கீடு மேற்கொள்ளப்படுகிறது.

ஆ) விலைப் பொறிமுறை லாப நோக்க அடிப்படையில் வள ஒதுக்கீட்டை மேற் கொள்கிறது.

இ) மத்திய திட்டமிடல் குழு சேவை நோக்க அடிப்படையில் வள ஒதுக்கீட்டை மேற் கொள்கிறது.

ஈ) மேற்கூறிய ஒன்றும் இல்லை.

78. இன்று உலக நாடுகளை மூன்று மண்டலங்களாக பிரிக்கலாம். அவை,

அ) முதலாளித்துவம், சமவுடமை, கலப்பு.

ஆ) முதலாம் மண்டலம், இரண்டாம் மண்டலம், மூன்றும் மண்டலம்.

இ) வடக்கு நாடுகள், தெற்கு நாடுகள், மேற்கு நாடுகள்.

ஈ) மேற்கூறிய எல்லாம் தவறு.